வழிக்க வேண்டும் என்ற இலக்கை வைத்துக்கொண்டு நாம் செய்திருக்க வேண்டும். 1974-லே இருந்து 1979 முடிய 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிய இந்த 15½ கோடி ரூபாய் மானியத்தைச் செலவிட்டிருந்தால் ஏறக்குறைய 50 கோடி ரூபாயை நாம் முழுவதும் தமிழகத்திலே இருக்கக்கூடிய சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்குக் கொடுத்திருக்க முடியும். ஆனால், இந்த அரசு, பொறுப்பேற்ற பிறகுதான் இந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக நாம் இதிலே தீவிர முயற்சி எடுத்து, கவனம் எடுத்துக்கொண்டு பாடுபட்டு வருவதால் சிறு விவசாயிகளுக்கு ஓரளவுக்கு நாம், நன்மை செய்ய முடிகிறது. மேலும், வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கும் நேரத்தில் ''ரீபேயிங் கெபாசிட்டி'' இருக்கிறதா என்பதைத்தான் அவர்கள் அதிகமாகப் பார்க்கிறார்கள். இவை களையெல்லாம் பார்த்துக் கொடுப்பதன் மூலம் இதிலே தாமதம் ஏற்படுகிறது. தாமதம் ஏற்படுகிற காரணத்தால் ஒழுங்காக நாம் இலக்கு வைத்திருக்கும் நேரத்திற்குள் கொடுக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் தீர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது.

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள்.

*வினா எண் 218— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரிய அரசு அனுமதிக்க உத்தேசித்துள்ளதா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

பேரவை முன் ஓர் விவர *அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அத்தகைய ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு எந்த எந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ; பேரவைத் தலைவரவர்களே, அரசின்கீழ் அவர் வகித்து வந்த பதவி காரணமாக அடைந்த அறிவு அல்லது அனுபவம், உத்தேசத் தொழிலதிபருக்கு நியாயமற்ற வகையில் அனுகூலமளிக்கப் பயன்

[* 367-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.]

படுத்தப்படும் என்கிற வகையில் அவருடைய வணிக நிறுவனக் கடமைகள் அமையாவிட்டால் அந்த அதிகாரிக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அரசு அனுமதித்துத் தான் அவர்கள் தனியார் துறையில் சேரலாம் என்ற நிலையிருந் தாலும் கடந்த கால பல அனுபவங்களிலே பல்வேறு டிபார்ட் மெண்டல் ஹெட்ஸ் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அப்படி அனுமதிக்கப்படுவதாலே அதிகாரிகள் அதற்காக, தனியார் துறை முதலாளிகளுக்கு, தாங்கள் சர்வீஸிலே இருக்கும்போது பல சலுகைகளைக் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அனுமதி கிடைக்கும் என்று நிச்சயம் இல்லாவிட்டாலும் கூட கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பிலே '' கன்செஷன்ஸ் '' கொடுக்கிறார்கள் சர்வீஸில் இருக்கும்போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்....

திரு. ரா. உமாநாத் : எனக்கு எல்லாம் தெரியும். ஆகவே, ப்ரீஃபாகச் சொல்லி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சுருக்கமாகக் கேட்க வேண்டும். எனக்கு எல்லாம் தெரியும், சுருக்கமாகச் சொல்லி பிறகு, கேள்வி கேட்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

திரு. ரா. உமாநாத் : எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லவில்லை. எனக்குக் கொஞ்சம் தெரியும். உங்களுக்கு எல்லாம் தெரியும்.

சர்வீஸிலே இருக்கும்போதே தனிமுதலாளிகளுக்குச் சலுகைகள் கொடுப்பதை இந்த அரசு அனுமதி ஊக்குவிப்பதாலே, '' கரப்ஷனை என்கரேஜ் '' பண்ணுவதாக ஆகிறது. ஆகவே, இந்த மாதிரியான அனுமதி, தனியார் துறையிலே வேலை செய்யும் அனுமதி '' பான் '' செய்யப்படுமா, பூரணமாக தடை செய்வார்களா என்பது என்னுடைய கேள்வி.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, ஓய்வூதியர், பணியிலிருக்கையில் எவரிடம் இப்போது வேலை நாடிச் செல்லக் கருதியுள்ளாரோ அந்தத் தொழிலதிபருடன் எந்த ஒரு விவகாரமும் வைத்திருந்து, அந்த ஓய்வூதியர், பணியிலிருக்கும்போது அந்தத் தொழிலதிப ருக்குச் சலுகைகள் காட்டியிருந்தார் என்னும் சந்தேகம் நியாயமான ஆதாரத்துடன் அரசுக்குத் தெரியவருமானால் அனுமதி வழங்கக் கூடாதென ஏப்ரல் 1977-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1979 மார்ச் 5]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெருக்கடி கால நேரத்தின்போதும் அதற்கு முன்னாலும் கூட கட்டாயமாக வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படுவார்களா ? அவர்களுக்கும் அத்தகைய சலுகைகள் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, அளிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் சொல்லும்போது, விதிகளுக்கு உட்பட்டுத்தான் அவர்களுக்கு அனுமதி வழங்குகிறோம் என்றுசொன்னார். ஆனால், தமிழகத்திலே உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தவர்கள் எல்லாம் தனியாரிடம் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன், நகரசபை மற்றும் அரசின் உயர்ந்த அதிகாரங்களில் இருந்தவர்களெல்லாம் வேலை செய்கிறார்கள். தமிழகத்தில் உள்ள நிர்வாக சீர்கேட்டுக்கு இவர்கள்தான் காரணம் என்ற உணர்வு தமிழகத்திலே வளர்ந்திருப்பதால் இதைத் தடை செய்ய மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அந்த உணர்வுகள் இருந்த காரணத்தால் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, 1977-ல் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மின்வாரியத்தில் பட்டதாரி இளநிலை உதவியாளர் சம்பள விகிதம்

*வினா எண் 219—திரு. தே. ஞானசிகாமணி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளில் மின்வாரியத்தில் பணியில் இருந்த பட்டதாரி இளநிலை உதவியாளர்களின் சம்பள விகிதம் பொருத்தும் விஷயமாக மதுரை, தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பின் மீது மின்வாரியம் தாக்கல் செய்த ரிட் மனுவை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்த பின்னும் மின்வாரியத்தால் பொதுவான உத்தரவுகள் பிறப்பிக்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1978 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் தேதியில் பட்டதாரி இளநிலை உதவியாளர்களுக்கு சாதகமான ஆணைகள் தமிழ்நாடு மின்வாரியத்தால பிறப்பிக்கப்பட்டு விட்டன.